**<u>அறம் கூறும் திருக்குறள்</u>** வளர்நிலை- 7

திருக்குறள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழில் எழுதப்பட்ட நூலாகும். சங்க இலக்கிய வகைப்பாட்டில் பதினெண்கீழ்க்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வகைப்பாட்டில் இருக்கும் இந்நூலின் பாடல்கள் அளவில் சிறிதாக இருப்பதால் குறள் எனப்படுகின்றது. திருக்குறள் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை அறம், பொருள், இன்பம் என்பனவாகும். திருக்குறளில் 133 அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரமும் பத்துப் பாடல்களைக் கொண்டது. எனவே திருக்குறள் 1330 பாடல்களைக் கொண்டது.

இந்நூலின் ஒவ்வொரு பாடலும் ஏழு சீர்களையும் இரண்டு அடிகளையும் கொண்டது. சொற்கள் குறைவாக காணப்பட்டாலும் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் அரும்பெரும் நூலாகும். திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இந் நூலானது உலகப் பொதுமறை, பொய்யா மொழி, வாயுறை வாழ்த்து, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல் எனப் பல பெயர்களாலும் அழைக்கப் படுகின்றது.

திருக்குறள் அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல். மக்கள் தம் அக வாழ்விலும் புற வாழ்விலும் இன்பமுடனும் நலனுடனும் வாழத் தேவையான அடிப்படைப் பண்புகளைக் கூறுகின்றது.

அறம் சார்ந்து அகிம்சையை மையமாகக் கொண்டு இயற்றப்பட்ட இந்நூல் தனிநபர் அடிப்படை நல்லொழுக்கங்களான இன்னா செய்யாமை மற்றும் புலால் உண்ணாமை ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. அயல்நாடுகளில் 40க்கு மேற்பட்ட மொழிகளால் மொழி பெயர்க்கப்பட்ட இந்நூல் உலகின் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட பண்டைய தலை சிறந்த நூலாகும்.

இத் திருக்குறளிலே அன்பு உடைமை அதிகாரத்தில்

“அன்பின் வழியது உயர்நிலை அ.ஃ.துஇலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு”

என்ற குறளின் மூலமாக அன்பு இல்லாத வாழ்வு வாழ்வாகாது எனும் கருத்துப் புலப்படுகின்றது. அன்பு ஒரு காந்த சக்தி அது ஆர்வத்தை தூண்டும் நேயத்தை வளர்க்கும் நட்பை உண்டாக்கும்.

அறத்திற்கு துணையாக இருப்பது அன்பு, மறத்திற்கு துணையாக இருப்பதுவும் அன்பு எனவே அறத்திற்கும், மறத்திற்கும் தூண்டுகோலாக உள்ளது அன்புதான்.

இது போலவே எல்லா மனிதருக்கும் தேவையான வாழ்வியல் கருத்துக்களை இரண்டு வரிகளில் சுருங்கக் கூறி விளங்க வைத்தல் இதன் சிறப்பாகும்.
நன்றி, வணக்கம்!